**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | CC. 152 of 2023 |
| Prosecution Witness | : | PW5 |

16.07.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சஞ்ஜீவி | Calling | : | காவல் உதவி ஆய்வாளர் |
| Father Name | : | ராமசாமி | Religion | : | 51 |
| Village | : | வையரிசெட்டிபாளையம் | Age | : | |
| Taluk | : | துறையூர் | | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

எதிரி ஆஜர் இல்லை. BNSS 355 ன் கீழ் மனு தாக்கல். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது தா.பேட்டை காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 11.11.2022 ம் தேதி துறையூர் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பு அதிகாரியாக இருந்த போது துறையூர் செல்லிப்பாளையம் கவுண்டர் தெருவை சேர்ந்த தாயுமான் மகன் செல்வராசு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.333/2022 சட்டப்பிரிவுகள் 279, 304(A) இ.த.ச கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. இத்துடன் எனது விசாரணையை முடித்து வழக்கு கோப்புகளை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளரின் பார்வைக்கு சமர்பித்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரித்ததர்க்கு பின்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேனா அல்லது புகார்தாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு

SURESHKUMAR R

Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.07.16 09:16:05 +0530

செய்தேனா என்றால் புகார்தாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகார்தாரர் தனது புகாரில் யாருடைய திருமண நிகழ்ச்சிக்கு கலந்து கொண்டதாக குறிப்பிட்டு புகார் அளிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். புகார்தாரர் தனது புகாரில் தனது இருச்சக்கர வாகனத்தின் பதிவு எண்ணை குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். புகார்தாரர் தனது புகாரில் இவ்வழக்கில் இறந்து போன கலைவாணன் சென்ற இருச்சக்கர வாகனத்திற்கும் புகார்தாரர் சென்றதாக சொல்லப்படும் இருச்சக்கர வாகனத்திற்கும் எவ்வளவு தூரம் இருந்தது என்பதை குறிப்பிட்டு புகார் அளிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். புகார்தாரர் தனது புகாரில் குறிப்பிட்டுள்ளது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் இவ்வழக்கில் இறந்து போனவர் தான் மலை பெய்ததால் கைகளை கண்ணில் வைத்து கொண்டு சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

SURESHKUMAR R

Digitally signed by SURESHKUMAR R
Date: 2026.07.16 09:16:21 +0530

நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ),
துறையூர்.